ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ காவார் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ காவார் ‖

## திருப்புல்லாணி - 2

‡காவார் மடல் பெண்ணை⋆ அன்றில் அரிகுரலும்⋆
ஏவாயினூடியங்கும்⋆ எஃகின் கொடிதாலோ⋆
பூவார் மணம் கமழும்⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
பாவாய்! இது நமக்கோர்⋆ பான்மையே ஆகாதே (1)

முன்னம் குறள் உருவாய்⋆ மூவடி மண் கொண்டளந்த⋆
மன்னன் சரிதைக்கே⋆ மால் ஆகிப் பொன் பயந்தேன்⋆
பொன்னம் கழிக் கானல்⋆ புள்ளினங்காள்! புல்லாணி⋆
அன்னமாய் நூல் பயந்தாற்கு⋆ ஆங்கிதனைச் செப்புமினே (2)

வவ்வித் துழாய் அதன்மேல்⋆ சென்ற தனி நெஞ்சம்⋆
செவ்வி அறியாது⋆ நிற்குங்கொல் நித்திலங்கள்⋆
பவ்வத் திரையுலவு⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
தெய்வச் சிலையாற்கு⋆ என் சிந்தை நோய் செப்புமினே (3)

பரிய இரணியனதாகம்⋆ அணியுகிரால்⋆
அரியுருவாய்க் கீண்டான்⋆ அருள் தந்தவா! நமக்கு⋆
பொரு திரைகள் போந்துலவு⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
அரிமலர்க் கண் நீர் ததும்ப⋆ அந்துகிலும் நில்லாவே (4)

வில்லால் இலங்கை மலங்கச்⋆ சரம் துரந்த⋆
வல்லாளன் பின் போன⋆ நெஞ்சம் வரும் அளவும்⋆
எல்லாரும் என் தன்னை⋆ ஏசிலும் பேசிடினும்⋆
புல்லாணி எம்பெருமான்⋆ பொய் கேட்டிருந்தேனே (5)

சுழன்றிலங்கு வெங்கதிரோன்⋆ தேரோடும் போய் மறைந்தான்⋆
அழன்று கொடிதாகி⋆ அஞ்சுடரில் தான் அடுமால்⋆
செழுந் தடம் பூஞ்சோலை சூழ்⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
இழந்திருந்தேன் என்தன்⋆ எழில் நிறமும் சங்குமே (6)

www.prapatti.com

கனையார் இடி குரலின்⋆ கார் மணியின் நாவாடல்⋆
திணையேனும் நில்லாது⋆ தீயில் கொடிதாலோ⋆
புனையார் மணி மாடப்⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
வினையேன் மேல் வேலையும்⋆ வெந்தழலே வீசுமே (7)

தூம் புடைக் கை வேழம்⋆ வெருவ மருப்பொசித்த⋆
பாம்பின் அணையான்⋆ அருள் தந்தவா நமக்கு⋆
பூஞ்செருந்தி பொன் சொரியும்⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
தேம்பல் இளம் பிறையும்⋆ என்தனக்கோர் வெந்தழலே (8)

வேதமும் வேள்வியும்⋆ விண்ணும் இரு சுடரும்⋆
ஆதியும் ஆனான்⋆ அருள் தந்தவா நமக்கு⋆
போதலரும் புன்னை சூழ்⋆ புல்லாணி கை தொழுதேன்⋆
ஓதமும் நானும்⋆ உறங்காதிருந்தேனே (9)

‡பொன்னலரும் புன்னை சூழ்⋆ புல்லாணி அம்மானை⋆
மின்னிடையார் வேட்கை நோய் கூர⋆ இருந்ததனை⋆
கல் நவிலும் திண் தோள்⋆ கலியன் ஒலி வல்லார்⋆
மன்னவராய் மண்ணாண்டு⋆ வானாளு முன்னுவரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com